1981 ஆகஸ்டு 31]

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த நூலகத்தில் சுமார் நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள ஐம்பொன் சிலைகள் இருக்கின்றன. அங்கே 80 வயதானவர்கள், 70 வயதானவர்கள் பணிகளிலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, அங்கே பி.எச்.டி. பட்டம் பெற்றவர்கள் நேர்முகப் பேட்டித் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அப்பணிகளில் நியமிக்கப்பட்டார்களா என்பதையறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, சரஸ்வதி மகால் நிர்வாகத்தை முழுவதையுமே சீர்திருத்தியமைக்க ஒரு நடவடிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. அத்தகைய நடவடிக்கையை நாம் எடுக்கும்பொழுது இந்த பல்வேறு குறைபாடுகள் இல்லாமல் போகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏர்வாடி அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்.

* வினா எண் 106— திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டம் ஏர்வாடி அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் ஆபத்தான நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு ஓட்டுக் கட்டடம் பழுதடைந்துள்ளது. அது இப்பொழுது பயன்படுத்தப்படவில்லை. இக்கட்டிடத்தை மராமத்து செய்வதற்கு பொதுப்பணித்துறையினரிடமிருந்து மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன. அவைகளைப் பெற்று மராமத்து பணியினை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, ரொம்பகாலமாகப் பழுதடைந்து மோசமாக இருப்பதால் வகுப்பறை நடத்தப்படாமல் இருக்கிறது. இதனால் இட நெருக்கடியும் அதிகமாக இருக்கிறது. எனவே, சீக்கிரமாக அந்த இடத்தைப் பழுது பார்ப்பதற்கோ அல்லது வேறொரு கட்டடத்தைக் கட்டுவதற்கோ அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.